This Page Intentionally Left Blank

# சனிக்கிழமை



ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
2002

# காலைப்பாட்டு

1. அண்ணாமலையில் சூரியன் உதித் தெழுந்தான், அழகானே ரமணரே வருக. அண்ணாமலையின் தலைவரே வருக.

2. சாலையிலே குயில்ஓசை காலையில் கூவிவிட்டது; உண்மையை போதிக்கும்குரு ரமணரே வருக. சாம்பவி பாகரே-இதயத்து ஒடுங்கியவரேவருக.

3. சங்கு ஒலித்து முடிந்தது. நட்சத்திரங்கள் மங்கி விட்டன. இங்கு எங்களுக்கு நன்மை செய்ய இனிமையான ரமணரே வருக. ஈசனே! தேவர்கள் தலைவரே வருக.

4. கோழிகள் கூவி, குருகுகள் ஒலி எழுப்பி விட்டன. நாழிகை ஆகிவிட்டது. நள்ளிரவும் நீங்கிற்று. ஆகவே வருக.

5. மங்கள சின்னங்களான காகளம்,பேரிகை முதலியன ஒலித்துவிட்டன. பொன்மேனி ரமணரே வருக. ஞான வடிவானவரே வருக.

6. காகம் கரைந்துவிட்டது. காலைப்பொழுதும் வந்துவிட்டது. நாகத்தை ஆபரணமாக அணிந்தவரே, நஞ்சினை கழுத்தில் தரித்தவரே வருக.

7. எங்கள் மனதின் கற்பனைகள் ஒழிந்து ஞானகமலங்கள் மலர்ந்தன. அனைத்திலும் விற்பன்னரே வருக. வேதாந்த வடிவானவரே வருக.

ஸ்ரீ

# காலைப்பாட்டு

1. அருண னுதித்தன னருண கிரிதன்னி
லழகிய ரமணரே வாரும்;
அருணை லேசரே வாரும்.

2. சாலைக் குயிலோசை காலையிற் கூவிற்று
சற்குரு ரமணரே வாரும்;
சாம்பவி பாகரே வாரும்.

3. சங்க மொலித்தது தாரகை மங்கின
இங்கித ரமணரே வாரும்;
ஈச சுரேசரே வாரும்.

4. கோழிகள் கூவின குருகுக ளியம்பின
நாழிகை யாச்சுது வாரும்;
நள்ளிரு ளகன்றது வாரும்.

5. சின்னங்கள் காகளம் பேரிகை யார்த்தன
பொன்னங்க ரமணரே வாரும்;
போத சொரூபரே வாரும்.

6. காகங் கரைந்தது காலையு மாயிற்று
நாகா பரணரே வாரும்;
நஞ்சணி கண்டரே வாரும்.

7. கற்பனை யொழிந்தது கமலங்க ளலர்ந்தன
விற்பன ரமணரே வாரும்;
வேதாந்த ரூபரே வாரும்.

8. முக்குணங்கள் அற்றவரே! முக்தியாகிய நாட்டை ஆள்பவரே சத்குரு ரமணரே வருக! சாந்தமான வடிவமே வருக.

9. சத்-சித்-ஆனந்த வடிவினைச் சார்ந்திடும் தத்துவங்களின் அரசரே வருக தாண்டவ மூர்த்தியே வருக.

10. இன்பம் துன்பம் அற்ற ஏகாந்த நிலையில், அன்பே வடிவாக கொண்டவரே வருக. ஆனந்தம் நிறைந்த அமைதியானவரே வருக.

*8.* முக்குண ரகிதரே முத்திநா டாள்வோரே
சற்குண ரமணரே வாரும்;
சாந்த சொரூபரே வாரும்.

*9.* சத்துச்சித் தானந்த வடிவினைச் சார்ந்திடுந்
தத்துவ ராயரே வாரும்;
தாண்டவ மூர்த்தியே வாரும்.

*10.* இன்பதுன் பமில்லா வேகாந்த மேடையி
லன்புருக் கொண்டோரே வாரும்;
ஆனந்த மோனரே வாரும்.